1972 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) வந்தவாசி குடிநீர் வழங்கு திட்டத்திற்கான மின்சார விசையேற்றங்கள், சென்னை-1-ல் உள்ள, ஈசன் எஞ்சினீயரிங் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டன.

(இ) அந்த இயந்திரங்கள் இயங்கத் தொடங்கிய நாள் தொடங்கி, அதாவது 1970-ஜனவரியிலிருந்து ஓராண்டுக் காலத்தில் இயந்திரம் செயல்படுவதில் குறைபாடு எதுவும் நேர்ந்தால் நேர் செய்து தருவதாக அந்தக் கம்பெனியால் உத்தரவாதம் அளிக்கப் பட்டது.

திரு. கே. எ. வகாப்: உதவித் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்று எப்பொழுதும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கிறது. அந்தக் கம்பெனிக்காரர்கள் வந்து ரிபேர் செய்துகூட, சரியான நிலைக்கு வரவில்லை. ஆகவே, பழுதடைந்திருக்கும் ஒரு இயந்திரத்தை மீண்டும் மாற்றியமைத்துக் கொடுக்கும்படி அரசு அவர்களைக் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பழுது பார்க்கப்பட்ட இரண்டாவது பம்ப் செட்டு கம்பெனியாரால் பழுதுபார்க்கப்பட்ட பிறகு, அது சீர்கேடு எதுவும் இல்லாமல் நடந்துகொண்டிருப்பதாகத் தான் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மறுபடியும் சீர்கேடாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார் களானால், அதுபற்றி உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

* 118 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இந்தப் பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மணப்பாறைக்கு காவிரியி லிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் இருந்ததே, அதில் எந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவிரியிலிருந்தும், பொன்னியாற்றிலிருந்தும், தேக்குமலையாற்றிலிருந்தும், ஆக இப்படி மூன்று இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவர 88 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், அது அதிகப்படியான செலவு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொன்னியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர 78 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், ஆனல், அப்படிக் கொண்டுவருவதன்மூலம் ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மணப்பாறைக்கு 23 மைல் அருகாமையிலுள்ள தேக்குமலை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதைப்பற்றியும் பரிசீலிக்கப்படுகிறது. இந்தப் பரிசீலனை விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அமைச்சகத்தில் இந்தி

* 119 வினா—திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அமைச்சர்களை இனிமேல் இந்தியில்தான் அழைக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1961-ம் ஆண்டு இந்திய அரசு விதிகளின் (அலுவல்களை ஒதுக்கீடு செய்தல்) முதல் விவர அட்டவணையிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக அவற்றிற்கீடான இந்தி சொற்களை அமைத்துக்கொள்ள வகை செய்து அவ்விதிகளைத் திருத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு, காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு இதற்கு முன் அளித்திருந்த உறுதிமொழிகளுக்கு முரணானது என்றும், 1968-ம் ஆண்டு 1-வது மத்திய சட்டத்தால் திருத்தப்பட்ட 1963-ம் ஆண்டு ஆட்சிமொழிகள் சட்டத்தின் விதித்துறைகளை மீறியதாகும் என்றும் முதலமைச்சர், மாண்புமிகு தலைமை அமைச்சருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் அவரது நாட்டத்திற்குக் கொண்டு வந்தார். அரசால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரும் மனக்கசப்பு இம்மாநிலத்தில் கிளர்ந்து பரவும் முன்னர், மேற் சொன்ன அறிவிப்பு திரும்பப் பெறப்படவேண்டும் என்றும் தலைமை